www.Padasalai.Net www.TrbTnpsc.com

# S அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி　　　தமிழ்　　　மதிப்பெண்கள்: 100

பகுதி - அ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:　　10×1=10

1) சேரர்களின் தலைநகரம் ______
அ) காஞ்சி　ஆ) வஞ்சி　இ) முசிறி　ஈ) தொண்டி

2) இயற்கையை போற்றுதல் தமிழ் ______
அ) மரபு　ஆ) பொழுது　இ) வரவு　ஈ) தகவு

3) கற்றவருக்கு அழகு தருவது ______
அ) தங்கம்　ஆ) வெள்ளி　இ) வைரம்　ஈ) கல்வி

4) இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ______
அ) இ, ஈ　ஆ) உ, ஊ　இ) எ,ஏ　ஈ) அ, ஆ

5) ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ______
அ) திருச்சி　ஆ) சென்னை　இ) மதுரை　ஈ) கோவை

6) 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______
அ) வெம்+கரி　ஆ) வெம்மை+கரி　இ) வெண்+கரி　ஈ) வெங்+கரி

7) விகாரப் புணர்ச்சி ______ வகைப்படும்
அ) ஐந்து　ஆ) நான்கு　இ) மூன்று　ஈ) இரண்டு

8) தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ______ நீட்சியாகவே உள்ளது
அ) மருந்தின்　ஆ) உடற்பயிற்சியின்　இ) உணவின்　ஈ) வாழ்வின்

9) என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு ______ பெருகிற்று
அ) காரி　ஆ) ஓரி　இ) வாரி　ஈ) பாரி

10) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ______
அ) கல்வெட்டுகள்　ஆ) செப்பேடுகள்　இ) பனையோலைகள்　ஈ) மண்பாண்டங்கள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**　　5×1=5

11) கலப்பில் ______ உண்டென்பது இயற்கை நுட்பம்
12) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ______
13) மாங்கனி நகரம் என்று அழைக்கப்படும் நகரம் ______
14) பின்னலாடை நகரமாக ______ விளங்குகிறது.
15) சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ______ தொகை ஆகும்.

**III. பொருத்துக:**　　5×1=5

16) விளித்தொடர் - தோன்றல் விகாரம்
17) கடைத்தெரு - கார்குழலி வந்தாள்
18) எழுவாய்த்தொடர் - புலவரே வருக
19) இயற்கை ஓவியம் - பெரியபுராணம்
20) இயற்கை அன்பு - பத்துப்பாட்டு

பகுதி - ஆ

**IV. அடிபிறழாமல் எழுதுக.**　　3+3+2+2=10

21) அ) கற்றோர்க்கு ...... எனத் தொடங்கும் பாடல் (அல்லது) ஆற்றுதல் எனத் தொடங்கும் பாடல்
ஆ) வாழ்க நிரந்தரம் எனத் தொடங்கும் பாடல் (அல்லது) போர்தற்கு அரும்பிணி எனத் தொடங்கும் பாடல்

22) அ) விலங்கொடு ........ எனத் தொடங்கும் குறள்
ஆ) விடல் என முடியும் குறள்

பகுதி - இ

**V. எவையேனும் ஒன்பது வினாக்களுக்கு விடையளி:-**　　9×2=18

23) உலகம் எவற்றால் ஆனது?
24) பகத்சிங் கண்ட கனவு யாது?
25) ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
26) விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

27) கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?
28) நோயின் மூன்று வகைகள் யாவை?
29) நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
30) நம் வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
31) யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
32) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
33) திரு.வி.க. சங்கப்புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.
34) தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
35) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
36) கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?

பகுதி - ஈ

**VI.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 4×2=8

37) தொகை நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
38) வேற்றுமையில் வல்லினம் மிகும் இடங்கள் இரண்டினைக் கூறுக.
39) மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
40) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
41) வினையெச்சத்தின் வகைகளை விளக்குக?
42) மரக்கட்டில் - இச்சொல்லைப் பிரித்துப் புணர்ச்சியை விளக்குக.

பகுதி - உ

**VII.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 4×4=16

43) தமிழ்மொழியை வாழ்த்தி பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
44) உடல்நலத்துடன் வாழ கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
45) புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?
46) மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.
47) மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.
48) கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?
49) தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர். ஆற்றிய பணிகள் யாவை?

பகுதி - ஊ

**VIII.** அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 4×2=8

50) அ) கலைச்சொல் தருக: i) Vowel ii) Thread (அல்லது)
ஆ) சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
i) கோழி _______ (கூவும்/கொக்கரிக்கும்) ii) சோறு _______ (தின்/உண்)
51) சரியான இணைச் சொற்களை இட்டு நிரப்புக. (ஈடுஇணை, மேடுபள்ளம், கல்விகேள்வி)
i) ஆற்று வெள்ளம் _______ பாராமல் ஓடியது.
ii) சான்றோர் எனப்படுபவர் _______ களில் சிறந்தவர் ஆவர்.
52) மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
i) முதலைக்கண்ணீர் ii) வாழையடி வாழையாக
53) பொருத்தமான சொல்லுருபுகளை இட்டு எழுதுக. (இருந்து, காட்டிலும், உடைய)
i) தமிழை _______ சுவையான மொழியுண்டோ!
ii) அருவி மலையில் _______ வீழ்ந்தது.

பகுதி - எ

**IX.** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:- 2×6=12

54) அ) வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
ஆ) காற்றுக்கருவி குறித்து நீவிர் அறிந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.
55) அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டு கடிதம் எழுதுக.
(அல்லது)
ஆ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

**X.** அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 1×8=8

56) அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக. முன்னுரை - நோய் வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை (அல்லது)
ஆ) கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் - என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

********

Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com